**<u>STARTING TIME 11.01 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 6/2025</u>**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assisatant of this court, on 09.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **வளர்மொழி** Husband's Name :

Address :

Age :

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எண் 63, தென் வன்னியர் வீதி, சோளிங்கர் என்ற விலாசத்தில் தற்சமயம் வசித்து வருகிறேன் என்றால், சரிதான். நான் மேற்படி விலாசத்தில் இவ்வழக்கின் 2–ம் பிரதிவாதி சந்தானகிருஷ்ணன் என்பவரது மனைவியாக தான் வாழ்ந்து வருகிறேன் என்றால், சரிதான். எனக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் எப்போது திருமணமானது என்றால், 23.02.2015 அன்று திருமணம் நடந்தது.

2. இவ்வழக்கின் 1–ம் வாதி ரத்தினவேல் எனது தாய் வழி தாத்தா என்றால், சரிதான். எனக்கும், பாலகிருஷ்ணன் என்பவருக்கும் நடந்த திருமணம் இன்று வரை விவாகரத்து செய்யப்படவில்லை என்றால், சரிதான். அவர் வேறு ஒரு திருமணம் செய்துக் கொண்டார், நானும் வேறு ஒரு திருமணம் செய்துக் கொண்டேன் என்றால், சரிதான்.

3. எனது பதிலுரையில் எனக்கு 2–வது திருமணம் செய்து வைத்ததே எனது குடும்பத்தினர் தான் என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எனது 2–வது திருமணத்தில் எனது தாத்தாவான 1–ம் வாதி மற்றும் 7, 8 பிரதிவாதிகள் கலந்துக் கொண்டார்கள் என்றால், வாதி மற்றும் 7–ம் பிரதிவாதி வந்தார்கள், 8–ம் பிரதிவாதி வரவில்லை. எனது 2–வது திருமணம் வீட்டில் நடந்ததா, வெளியில் நடந்ததா என்றால், கோவிலில் நடந்தது. திருமணத்தின் போது புகைப்படங்கள் எடுக்கப்பட்டதா என்றால், எடுக்கப்பட்டது. புகைப்படங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

4. வாதியான எனது தாத்தாவிற்கு எத்தனை மகள்கள் என்றால், இரண்டு மகள்கள். அவருக்கு 3 மகன்கள் என்றால், சரிதான். அவர்கள் பெயர் பாலகிருஷ்ணன், குணசேகரன் மற்றும் நரசிம்மன் என்றால், சரிதான். தாவாவில் சொல்லியுள்ள சொத்துக்கள் என தாத்தாவான 1–ம் வாதியின் சுயார்ஜித சொத்துக்கள் என்றால், சரிதான்.

5. எனக்கும், 2–ம் வாதிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால், 28.05.2009 அன்று நடந்தது. எங்கள் இருவருக்கும் குழந்தை பிறந்ததா என்றால், ஒரு குழந்தை பிறந்து 1–1/2 வயதில் இறந்துவிட்டது. இவ்வழக்கை முதலில் எனது தாத்தாவான 1–ம் வாதி தான் தாக்கல் செய்தார் என்றால், சரிதான், அவரை வற்புறுத்தி தான் இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதை அவர் உயிருடன் இறந்த போதே நிரூபித்தேனா என்றால், அவர் ஒரு முறை கூட நீதிமன்றத்திற்கு வரவில்லை. நான் சொல்வது தவறு என்றும், நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தால் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பார் என்றால், சரியல்ல.

6. இவ்வழக்கை தாக்கல் செய்த போது நான் அசல் வழக்கு எண் 25/2025 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். இரண்டு வழக்குகளிலும் உள்ள சொத்துக்கள் ஒரே சொத்துக்கள் தான் என்றால், சரிதான்.

எனது தாத்தாவான 1–ம் வாதி எந்த தேதியில் எனக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால், 15.03.2013 என்று எழுதி வைத்தார். அவருக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால், தெரியும். அவர் இறக்கும் வரை படுத்த படுக்கையாக இருந்தார் என்றால், இரண்டு மாதமாக அது போல் இருந்தார். அவர் எப்போது காலமானார் என்றால், 30.12.2020 அன்று காலமானார். 1–ம் வாதி இறப்பதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பு இருந்து படுத்த படுக்கையாக இருந்தாதாக நான் சொல்வது தவறு என்றும், அவர் எழுதி வைத்த உயில் சாசனத்தை மறுப்பதற்காக வேண்டியே அது போல் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

7. எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த அதே தேதியில் தான் 1–ம் வாதி எனது அம்மாவுக்கும் ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால், சரிதான், அந்த தேதியில் மொத்தம் 5 செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். அதன் பிறகு 1–ம் வாதி அவருக்கு என தனிப்பட்ட சொத்துக்கள் எதையும் நிறுத்தி வைத்துக் கொள்ளவில்லை என்றால், சரிதான்.

8. தற்சமயம் 2–ம் வாதிக்கு, தனது தந்தை சம்பாதித்த சொத்துக்கள் என எதுவும் இல்லை என்றால், சரிதான். எனது முதல் கணவரான 2–ம் வாதி எப்போது வீட்டை விட்டு வெளியே சென்று விட்டார் என்றால், 15.07.2012 அன்று சென்றுவிட்டார். அவரை காணவில்லை என காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால், 1–ம் வாதி கொடுத்தார். காவல் நிலையத்தில் எந்த பதிலும் சொல்லவில்லை என்றால், ஒரே ஒரு முறை அழைத்து அடையாளம் காணாத ஒரு பிரேதம் இருப்பதால் அதை பார்க்குமாறு கூறினார்கள், அப்போது 7–ம் பிரதிவாதி போய் பார்த்து, அந்த பிரேதம் வேறு யாரோ என்று சொல்லிவிட்டார். மேற்படி விவரத்தை இவ்வழக்கின் பதிலுரையிலோ அல்லது நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலோ சொல்லியுளளேனா என்றால், இல்லை. அதன் பிறகு நான் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர் மனு தாக்கல்

செய்தேனா என்றால், இல்லை.

9. எனக்கும், 2-ம் வாதிக்கும் திருமணமான பிறகு சண்டை சச்சரவு எதுவும் இருந்ததா என்றால், எப்போதும் இருந்ததில்லை. நான் சொல்வது பொய் என்றும், எப்போதும் சண்டை சச்சரவு இருந்த காரணத்தினால் தான் அவர் வீட்டை விட்டு சென்று விட்டார் என்றால், சரியல்ல. 2-ம் வாதி, என்னை விட்டு சென்ற பிறகு 1-ம் வாதி, நானும் ஒன்றாக தான் வசித்து வந்தோம் என்றால், எனக்கு 2-வது திருமணம் நடைபெறும் வரை ஒன்றாக தான் இருந்தோம்.

10. அந்த சமயத்தில் நானும், எனது அம்மாவும், 1-ம் வாதியை வற்புறுத்திய காரணத்தினால் தான் அவர் உயில் சாசனம் எழுதி வைப்பதற்கு பதிலாக செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால், சரியல்ல, அவராக தான் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார். அவர் உயில் எழுதுவதாக சொல்லி தான் என் பெயரில் ஆவணம் எழுதினார் என்றும், ஆனால் நாங்கள் தான் அவரை ஏமாற்றி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொண்டோம் என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 11.32. A.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.09.09 16:51:10 +0530